## வேலைவாய்ப்பு கார்னர்

# இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வேலை.. தமிழ் நல்லா தெரிந்தால் முன்னுரிமை..

சென்னை: பொதுத்துறை வங்கிகளில் ஒன்றான இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் 750 காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. தமிழ் மொழி நன்றாக தெரிந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. டிகிரி முடித்தவர்கள் இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். இது குறித்து மேலும் விவரங்களை இங்கு பார்க்கலாம்.

நாட்டில் உள்ள முன்னணி பொதுத்துறை வங்கிகளில் ஒன்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி. சென்னையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் இந்த வங்கிக்கு நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான வங்கி கிளைகள் உள்ளன. சுமார் 21 ஆயிரம் ஊழியர்களுடன் இயங்கி வரும் வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வேலைவாய்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் படிக்க தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியிடங்கள் விவரம்: 750 - பயிற்சி பணியிடங்கள் (Apprentice). மாநில வாரிய பணியிடங்கள் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தமிழகத்தில் 175 பணியிடங்கள் உள்ளன. கேரளாவில் 40 பணியிடங்களும், கர்நாடகாவில் 30 பணியிடங்களும், மகாராஷ்டிரா 60, ஆந்திர பிரதேசம் 25 என மொத்தம் 750 பணியிடங்கள் உள்ளன.

கல்வித் தகுதி: அப்ரெண்டீஸ் எனப்படும் இந்த பயிற்சி பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் பட்டம் முடித்து இருந்தால் போதும். 01.04.2021 முதல் 01.03.2025 க்குள் டிகிரி முடித்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்கள். அதாவது இளம் பட்டதாரிகள் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உள்ளூர் மொழி தெரிந்து இருப்பது அவசியம். ஆன்லைன் எழுத்து தேர்வில் தேர்ச்சி பெற்று சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும் போது உள்ளூர் மொழித்திறன் தேர்வு நடைபெறும். அதாவது, தமிழ்நாட்டில் உள்ள பணியிடங்களுக்கு விண்ணப்பித்தால் தமிழ் எழுத, படிக்க தெரிந்து இருக்க வேண்டும்.

வயது வரம்பு: விண்ணப்பதாரர்கள் 01.03.2025 தேதிப்படி குறைந்தபட்சம் 20 வயது பூர்த்தியானவராகவும் அதிகபட்சம் 28 வயதுக்கு மிகாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசு விதிமுறைகளின் படி வயது உச்ச வரம்பில் தளர்வுகள் அளிக்கப்படும். எஸ்.சி / எஸ்.டி பிரிவினர் என்றால் 33 வயது வரையும், ஓபிசி பிரிவினர் என்றால் 31 வயது வரையும் மாற்றுத்திறனாளி என்றால் 38 வயது வரையும் விண்ணப்பிக்க முடியும்.

ஊதியம் எவ்வளவு?: பயிற்சி பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு மெட்ரோ நகரங்கள் என்றால் ரூ.15 ஆயிரம் வழங்கப்படும். நகரங்கள் என்றால் மாதம் ரூ.12 ஆயிரமும், கிராமப்புறம் மற்றும் சிறு நகரங்கள் என்றால் மாதம் ரூ.10 ஆயிரம் ஊதியமாக வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படுவது எப்படி?: அப்ரெண்டீஸ் எனப்படும் பயிற்சி பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் முன்பாக தேர்வு அறிவிப்பினை ஒருமுறை படித்து தெரிந்து கொள்ளவும். தேர்வுக் கட்டணம் ரூ.800 ஆகும். எஸ்.சி/எஸ்.டி பிரிவினர் என்றால் ரூ.600 கட்டணம் ஆகும். விண்ணப்பிக்க அவகாசம் தொடங்கிய நாள் 01.03.2025 ஆகும். விண்ணப்பிக்க கடைசி நாள் 09.03.2025 ஆகும். தேர்வு கட்டணம் செலுத்த கடைசி நாள் 12.03.2025 ஆகும். தேர்வு நடைபெறும்: நாள் 16.03.2025 ஆகும்.

மேலும் விவரங்களுக்கு: https://www.iob.in/upload/CEDocuments/FinalEmpanelmentInquiryOfficersAdvt.pdf

டிசம்பர் வரையிலான

வெளிநாடு வாழ




## அரசு பல் டாக்டராக வாய்ப்பு



தமிழ்நாடு மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக தமிழக மருத்துவத்துறையில், பல் மருத்துவ பிரிவில் உதவி அறுவை சிகிச்சை நிபுணர் பணியில் 47 காலியிடங்கள் உள்ளன.

**கல்வித்தகுதி:** பல் மருத்துவ அறுவை சிகிச்சை (Dental Surgery) பெற்றிருக்க வேண்டும். மெட்ராஸ் மெடிக்கல் பதிவுச் சட்டம், 1914 கீழ் பதிவு செய்திருக்க வேண்டும். 12 மாதங்களுக்கு குறையாமல் அவுஸ் சர்ஜனாக பணியாற்றி இருக்க வேண்டும். தமிழ்நாடு பல் மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும்.

**வயது வரம்பு:** 37 வயதுக்குள் இருக்க வேண்டும். எஸ்சி, எஸ்டி, எம்பிசி, பிசி பிரிவினர், இந்தப் பிரிவுகளில் முன்னாள் ராணுவத்தினருக்கு அதிகபட்சமாக 59 வயது வரை இருக்கலாம். இதர வகுப்பு பிரிவினரில் மாற்றுத்திறனாளிகள் 47 வயது வரையும், முன்னாள் ராணுவத்தினர் 50 வயது வரையும் இருக்கலாம்.

**தேர்வு செய்யும் முறை:** ஆன்லைன் எழுத்து தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு. கணினி வழி எழுத்துத் தேர்வு கொள்குறி வகையில், இரண்டு தாள்களில் தேர்வு நடத்தப்படும். இதில் தமிழ் மொழி தகுதித்தாள் கட்டாயமாகும்.

**ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டிய இணையதளம்:** mrb.tn.gov.in

**விண்ணப்ப கட்டணம்:** ரூ.1,000. எஸ்சி, எஸ்சிஏ, எஸ்டி பிரிவினர் ரூ.500 செலுத்தினால் போதும்.

கடைசி தேதி: 17.03.2025

## ஐடிபிஐ வங்கியில் அதிகாரி ஆகலாம்




ஐடிஐபி வங்கியில் ஜூனியர் உதவி மேலாளர் பணியில் 650 காலியிடங்கள் உள்ளன.

**கல்வித்தகுதி:** ஏதாவது ஒரு டிகிரி முடித்திருக்க வேண்டும். கணினி பற்றிய அறிவு அவசியம். உள்ளூர் மொழி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வங்கியில் நேரடியாக அதிகாரி பணியில் சேர விரும்பும் பட்டதாரிகள், வங்கி மற்றும் நிதி சேவை குறித்த முதுகலை பட்டயப் படிப்பை படிக்க வேண்டும். இந்த படிப்பை வங்கியே வழங்கும். 6 மாதங்கள் வகுப்பறைகளில் பாடம் நடத்தப்படும்.

**வயது வரம்பு:** 20 வயது முதல் 25 வயதுக்குள் இருக்க வேண்டும். அதாவது, 01.03.2000க்கு முன்பாகவோ 01.03.2005 பிறகோ பிறந்தவராக இருக்க கூடாது. அரசு விதிகளின்படி வயது உச்ச வரம்பில் தளர்வு உண்டு.

**தேர்வு செய்யும் முறை:** ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு. தமிழகத்தில் சென்னை, கோவை, ஈரோடு, மதுரை, நாகர்கோவில், கன்னியாகுமரி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், விருதுநகர் ஆகிய நகரங்களில் ஆன்லைன் தேர்வு நடத்தப்படும்.

**ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டிய இணையதளம்:** www.idbibank.in

**விண்ணப்ப கட்டணம்:** ரூ.1,050. எஸ்சி/ எஸ்டி பிரிவினருக்கு ரூ.250 செலுத்த வேண்டும்.

**கடைசி தேதி:** 12.03.2025

## அசாம் ரைபிள்ஸ் படைப்பிரிவில் வேலை



மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அசாம் ரைபிள்ஸ் படைப் பிரிவில் மத ஆசிரியர், ரேடியோ மெக்கானிக், லைன்மேன்,

மெக்கானிக், டிராப்ட்மேன், மருந்தாளுனர், எக்ஸ்ரே உதவியாளர், கால்நடை கள உதவியாளர், தூய்மை பணியாளர் உட்பட 215 காலியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

**கல்வித்தகுதி:** 10ம் வகுப்பு, ஐடிஐ, டிப்ளமோ, டிகிரி படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். பணியிடங்களுக்கு தகுந்தபடி கல்வி தகுதி மாறுபடும். மெக்கானிக், பிட்டர் போன்ற பணிகளுக்கு துறை சார்ந்த பிரிவில் ஐடிஐ படித்திருக்க வேண்டும்.

**வயது வரம்பு:** ஐடிஐ பணியிடங்களுக்கு 18 வயது முதல் 23 வயதுக்குள் இருக்க வேண்டும். மத ஆசிரியர் பணிக்கு விண்ணப்பிப்பவர்கள் 18 வயது முதல் 30 வயதுக்குள் இருக்க வேண்டும். அரசு விதிகளின் படி வயது வரம்பில் தளர்வு உண்டு.


**தேர்வு செய்யும் முறை:** உடல் தகுதி தேர்வு, திறன் தேர்வு, எழுத்து தேர்வு. கடைசி கட்டமாக மருத்துவ பரிசோதனை நடத்தப்படும்.

**ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டிய இணையதளம்:** www.assamrifles.gov.in

**விண்ணப்ப கட்டணம்:** மத ஆசிரியர், எலக்ட்ரிக்கல் மற்றும் மெக்கானிக்கல் பணிகளுக்கு ரூ.200 செலுத்த வேண்டும். எஸ்சி / எஸ்டி, பெண்களுக்கு கட்டணம் கிடையாது. இதர பணிகளுக்கு ரூ.100.

**கடைசி தேதி:** 22.03.2025

## தூத்துக்குடி துறைமுகத்தில் சேரலாம்



தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் கன்சல்டன்ட், அசோசியேட் கன்சல்டன்ட், புரெபஷனல், ஜூனியர் புரெபஷனல் இண்டெர்ன் என 17 காலியிடங்கள் தற்காலிக அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன.

**கல்வித்தகுதி:** பிஇ, பிடெக், முதுகலை பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். துறை சார்ந்த பிரிவை எடுத்து படித்து இருப்பது அவசியம்.


**வயது வரம்பு:** ஆலோசகர் பணிக்கு 45 வயதுக்குள்ளும், கன்சல்டன்ட் பணிக்கு 40 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும். இதர பணியிடங்களுக்கு அதிகபட்ச வயது 30 ஆகும்.

**தேர்வு செய்யும் முறை:** தகுதி பட்டியல், நேர்முகத் தேர்வு

ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டிய இணையதளம்: www.vocport.gov.in

கடைசி தேதி: 20.03.2025

## இன்சூரன்ஸ் துறையில் பணிவாய்ப்பு



மத்திய அரசின் கீழ் செயல்படும் யுனைட்டெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தில் அப்ரன்டிஸ் பிரிவில் தமிழகம் 35, புதுச்சேரி 5, உட்பட மொத்தம் 105 இடங்கள் உள்ளன.

**கல்வித்தகுதி:** ஏதாவது ஒரு டிகிரி முடித்திருக்க வேண்டும்


**வயது வரம்பு:** 20 வயது முதல் 28 வயதுக்குள் இருக்க வேண்டும்

**தேர்வு செய்யும் முறை:** சான்றிதழ் சரிபார்ப்பு

**ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டிய இணையதளம்:** www.uiic.co.in

**கடைசி தேதி:** 10.3.2025

## பரோடா வங்கியில் வேலை




பரோடா வங்கியில், அப்ரெண்டிஸ் பிரிவில் தமிழகத்தில் 223 காலியிடங்கள் உட்பட மொத்தம் 4 ஆயிரம் காலியிடங்கள் உள்ளன.

**கல்வித்தகுதி:** ஏதாவது ஒரு டிகிரி முடித்திருக்க வேண்டும்

**வயது வரம்பு:** 20 முதல் 28 வயதுக்குள் இருக்க வேண்டும்

**தேர்வு செய்யும் முறை:** ஆன்லைன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு. சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, திருப்பூர் உட்பட 16 இடங்களில் தேர்வு மையங்கள் செயல்படும்.

**ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டிய இணையதளம்:** www.bankofbaroda.in

**விண்ணப்ப கட்டணம்:** ரூ. 800, பெண்களுக்கு ரூ. 600. எஸ்சி/ எஸ்டி பிரிவினருக்கு ரூ. 400.

**கடைசி தேதி:** 11.3.2025

## சிபிஆர்ஐ நிறுவனத்தில் வேலை

மத்திய அரசின் கீழ் செயல்படும் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தில் (சிபிஆர்ஐ) ஜூனியர்ஸ்டெனோகிராபர், ஜூனியர் செக்ரட்ரி அசிஸ்டென்ட் என மொத்தம் 20 காலியிடங்கள் உள்ளன.

सीएसआईआर
CSIR
भारत का नवाचार इंजन
The Innovation Engine of India

**கல்வித்தகுதி:** பிளஸ் 2 முடித்திருக்க வேண்டும்

**வயது வரம்பு:** 18 முதல் 28 வயதுக்குள் இருக்க வேண்டும்

**தேர்வு செய்யும் முறை:** ஆன்லைன் தேர்வு

**ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டிய இணையதளம்:** www.cbri.res.in

**விண்ணப்ப கட்டணம்:** ரூ.500. எஸ்சி/ எஸ்டி பிரிவினருக்கு கட்டணம் இல்லை

**கடைசி தேதி:** 7.3.2025

## தமிழக அரசில் மருத்துவ அதிகாரியாக வாய்ப்பு



தூத்துக்குடி மாவட்ட சுகாதார சங்கத்தில் மருத்துவ அதிகாரி, ஆர்எம்என்சிஎச் கவுன்சிலர் பணிகளில் தலா ஒரு காலியிடம் உள்ளது

**கல்வித்தகுதி:** எம்பிபிஎஸ்/ இளநிலை பட்டம்/ முதுநிலை பட்டம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**வயது வரம்பு:** மருத்துவ அதிகாரிக்கு அதிகபட்ச வயது 40,

ஆர்எம்என்சிஎச் கவுன்சிலருக்கு அதிகபட்ச வயதானது 32, 34, 37 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தேர்வு செய்யும் முறை:** நேர்காணல்

**ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டிய இணையதளம்:** thoothukudi.nic.in

கடைசி தேதி: 10.03.2025